

உத்தரகாண்ட் மாநிலத்தில் நடைபெற்ற 38 வது தேசிய மல்லர் கம்பம் விளையாட்டில் தனி நபர் பிரிவில் ஹேமச்சந்திரன் என்பவர் இரண்டு வெண்கல பதக்கத்தையும் , குழு பிரிவில் தமிழக அணி வெண்கல பதக்கத்தையும் வென்றுள்ளது , இதனை தொடர்ந்து வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடியை சந்தித்து வாழ்த்துக்களை பெற்றார். அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி முதல்வர் சிவக்குமார் , மாவட்ட விளையாட்டு அலுவலர் ஆழி வாசன், தமிழ்நாடு மல்லர் கம்பம் பொதுச் செயலாளர் துரை செந்தில்குமார், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ப.அன்பரசு உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.



மதுரை வடக்கு மாவட்டம் – மதுரை மேற்கு தொகுதியில் வருகிற 23ஆம் தேதி விளாங்குடி கலைஞர் திடலில் நடைபெற உள்ள மாபெரும் பொது உறுப்பினர்கள் கூட்டத்தை சிறப்பாக நடத்துவது குறித்து நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் வடக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ. கே.தனச்செல்வம், ஜி.பி.ராஜா, சம்மட்டிபுரம் கணேசன், வீர கணேசன், மூவேந்திரன், அன்பழகன், சுதன், மதி வெங்கடேஷ், காவேரி, தவமணி, ஆர்.கே.ஜெயராமன், சிறைச்செல்வன், தன்ராஜ், ராஜாமணி, அழகு பாண்டி, இளங்கோவன், அய்யப்பன், பரவை அன்புச்செல்வன், என்.எஸ்.மணி, மண்டல தலைவர்கள் சரவண புவனேஸ்வரி, சுவிதா விமல் மற்றும் திரளான கழக நிர்வாகிகள் கழகத்தினர் பங்கேற்றனர்.

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள்!

# மாவட்டந்தோறும் எழுச்சியுடன் கொண்டாடுவோம்!

### டாக்டர் சுபேர்கான் தலைமையில் நடைபெற்ற கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, பிப். 21 -

“சிறுபான்மையினரின் பாதுகாவலர் முதலமைச்சர் கழகத் தலைவர் பிறந்த நாளை மாவட்டந்தோறும் எழுச்சியோடு கொண்டாடுவோம் என்று தி.மு.க சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



தி.மு.க சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் எம்.எஸ் தலைமையில் நடைபெற்றது.

இதில், மாநில துணைத் தலைவர் ஜோசப் ராஜ் முன்னிலை வகித்தார். இந்நிகழ்வில், மாநில துணைச் செயலாளர்கள் அடையாறு சபீல்கான் வரவேற்புரையாற்ற, மாநில துணைச் செயலாளர்கள் இரா. அன்வர்கான், நூருல்லா, முனவர்ஜான், விஜயகுமார், கா.ரபி அகமது, மு. சாகுல் அமீது மற்றும் அன்வர் அலி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

மேலும், மாநிலம் முழுவதும் இருந்து மாவட்ட, மாநகர தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் பங்கேற்று சிறப்பித்தனர்.

இக்கூட்டத்தில் முதலாவதாக, இந்தியாவின் மிகச் சிறந்த பொருளாதார நிபுணர் மேனாள் ரிசர்வ் வங்கியின் கவர்னர் ஒன்றிய நிதியமைச்சர் மற்றும் பிரதமர் உள்ளிட்ட பல்வேறு பதவிகளில் திறம்பட செயலாற்றியவரும், ஆட்சியில் இருந்த பத்தாண்டுகளில் தமிழ்நாட்டுக்கு எண்ணிலடங்கா சிறப்பு திட்டங்களை தந்து இந்திய பொருளாதாரத்தை உயர்த்திய முன்னாள் பிரதமர் டாக்டர். மன்மோகன் சிங் அவர்களின் மறைவுக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தொடர்ந்து, சிறுபான்மையின மக்களின் உரிமைகளைக் காத்து, நாளும் பொழுதும் மக்கள் நலத்திட்டங்களால் நல்லாட்சி புரிந்திடும் ஒப்பற்ற தலைவர்; இந்திய திருநாட்டின் நம்பர் 1 முதல்வர்; சிறு பான்மையின மக்களின் பாதுகாவலர், முதலமைச்சர்; கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழாவினை அனைத்து கழக மாவட்டங்களிலும் ஏழை எளிய மாணவர்களும், பொதுமக்களும் பயன்பெறும் வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்கி மிகுந்த எழுச்சியுடன் கொண்டாடுவதுடன், கழகத் தலைவர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு நிகழ்த்தியுள்ள நான்காண்டு சாதனைகளை மக்களிடம் கொண்டு செல்லும் வகையில் பிறந்தநாள் விழாவினைக் கொண்டாடிட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தொடர்ந்து, இந்திய நாட்டுக்கு மட்டுமல்ல, உலகத்துக்கே தமிழ் நிலப்பரப்பில் இருந்துதான் இரும்பின் காலம் தொடங்கியது என்று, தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள் மூலம் இரும்பின் காலம் 5300 ஆண்டுக்கு முன் என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க செய்தியை உலகிற்கு பறைசாற்றிய முதல்வர் அவர்களுக்கும், ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் வரலாற்று வெற்றியை வழங்கிய மக்களுக்கும், இந்த ஆண்டின் இறுதிக்குள் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள ஏழை எளிய மக்கள் ஆறு இலட்சம் பேருக்கு இலவச வீட்டு மனைப் பட்டா வழங்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டுள்ள ‘எல்லார்க்கும் எல்லாம்’ என்ற இலட்சிய நோக்கின் வித்தகர்; திராவிட மாடல் அரசின் முதல்வர் அவர்களுக்கு ஆறு இலட்சம் குடும்பங்களின் சார்பாக இக்கூட்டத்தின் வாயிலாக நன்றி தெரிவித்தல் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

மேலும், மக்கள் இருக்குமிடம் தேடி மருத்துவத்தை வழங்கிடும் மகத்தான திட்டமாம் “மக்களைத் தேடி மருத்துவம்” திட்டம் இரண்டு கோடிக்கும் மேலான பயனாளர்களை கண்டு சரித்திர சாதனை படைத்ததோடு; அதன் தொடர்ச்சியாக, குறைந்த விலையில் பொதுமக்கள் பயனடையும் வகையில் சென்னை உட்பட தமிழ்நாடு முழுதும் 1000 இடங்களில் “முதல்வர் மருந்தகம்” முதல்வர் அவர்களின் பொற்கரங்களால் துவக்கம் காண இருப்பதற்கு திராவிட மாடல் அரசிற்கு நன்றி தெரிவிக்கும் விதமாக சிறப்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.இதனைத் தொடர்ந்து ஒன்றிய பாஜக அரசைக் கண்டித்து கீழ் காணும் கண்டன தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

சிறுபான்மையினரின் நலனை நேரிடையாக பாதிக்கும் ஒன்றிய பாஜக அரசின் வக்பு சட்டத் திருத்த மசோதா குறித்து ஆராய தி.மு.க உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கி அமைக்கப்பட்ட கூட்டுக்குழுவின் பரிந்துரைகளை ஏற்காமல், கூட்டுக்குழுவின் தலைவரான பா.ஜ.கவின் எம்.பி., ஜெகதாம்பிகா பால் அவர்களின் தன்னிச்சையான முடிவுகளின் அடிப்படையில் நாடாளுமன்றத்தில் வக்பு சட்ட திருத்த மசோதாவை தாக்கல் செய்திருக்கும் ஒன்றிய பாசிச மோடி அரசுக்கு இக்கூட்டத்தின் வாயிலாக கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

அரசுப் பள்ளிகளில் மும்மொழிகள் கற்பிக்கப்படுவதைக் கட்டாயமாக்கும் தேசியக் கல்விக் கொள்கையான மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொண்டு செயல்படுத்தினால் மட்டும்தான் தமிழ்நாட்டுக்கு நிதி வழங்கப்படும் என்று ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் கூறியிருப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. பொதுப்பட்டியலில் உள்ள கல்வியில் மாநில அரசுகள் தனிக்கொள்கையை கடைபிடிக்க வகை செய்யப்பட்டுள்ள நிலையில், அதற்கு மாறாக தேசியக் கல்விக் கொள்கையைத் திணிப்பதை ஒன்றிய அரசு உடனடியாக கைவிட வேண்டும்.

புதிய கல்விக் கொள்கையின் ஓர் அங்கமான பி.எம்ஸ்ரீ பள்ளிகளை தமிழக அரசு திறக்க வேண்டும், அவற்றில் மும்மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையை ஏற்க தமிழக அரசு மறுத்துவிட்டதால், ஒருங்கிணைந்தக் கல்வித் திட்டத்தின்படி தமிழகத்திற்கு வழங்க வேண்டிய ரூ.2,401 கோடி நிதியை வழங்காமல் பல மாதங்களாக ஒன்றிய அரசு தாமதப்படுத்தி வருகிறது. இந்த நிதியை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று தமிழக அரசும், பள்ளிக் கல்வித்துறை அமைச்சரும் பல மாதங்களாக வலியுறுத்தி வருகின்றனர். எனினும் புதியக் கல்விக் கொள்கையை நிதி வழங்கப்படும் என்ற ஒன்றிய அமைச்சரின் ஆணவக்கருத்து மீண்டும் ஒரு மொழிப்போருக்கு வழிவகுக்கும் விதமாக உள்ளது.

கழகத் தலைவர்; இளம் தலைவர் வழிநின்று “வெல்வோம் இருநூறு! படைப்போம் வரலாறு!” என்ற வெற்றி முழக்கத்துடன் இறுதியாக அணியின் துணைச் செயலாளர் என்.பி.எம்.சேக் அப்துல்லா நன்றி கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திண்டிவனம் கோ.வெங்கட்ராமன்

### பிப்ரவரி 21 (2013)



1974ஆம் ஆண்டு முதல் கழக வழக்கறிஞராக பணியாற்றி வந்தார்.

1989–ல் மாநிலங்களவை உறுப்பினராகவும் – 1996–ல் திண்டிவனம் மக்களவை தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, மத்திய அமைச்சராகப் பணியாற்றினார்.

பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த இவர் கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம், சட்ட எரிப்பு போராட்டம் போன்ற போராட்டங்களில் பங்கேற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## ராமேஸ்வரம் மீனவர்களின் கோரிக்கையை ஏற்று உடனடியாக

# ரூ.360 கோடியில் நலத்திட்டங்களை அறிவித்த முதல்வருக்கு நன்றி!

### கழக மீனவர் அணிச் செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் அறிக்கை!

சென்னை, பிப். 21 -

ராமேஸ்வரம் மீனவ மக்களின் கோரிக்கைகளை கனிவுடன் ஏற்று, உடனடியாக 360 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திட்டங்களை அறிவித்து மீனவர்களின் மனங்களில் மட்டற்ற மகிழ்ச்சியை விதைத்திருக்கும் மாசற்ற மாணிக்கம், மீனவர் நலம் காக்கும் காவல் அரண், கலங்கரை விளக்கம், முதலமைச்சர், கழகத் தலைவர், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு தமிழ்நாட்டின் மீனவர் சமுதாயத்தின் சார்பாகவும் கழக மீனவர் அணியின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்து தி.மு.க. மீனவர் அணி செயலாளர் டாக்டர் அ. ஜோசப் ஸ்டாலின் அறிக்கை விடுத்து ள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -

இராமநாதபுரம் மாவட்ட மீனவர் சங்கங்களின் நிர்வாகிகளுடன் 18.02.2025 அன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து தங்கச்சிமடம் மீன்பிடி இறங்கு தளம் மீன்பிடி துறைமுகமாக தரம் உயர்த்தவும், குந்துகால் மீன் இறங்குதளத்தை தூண்டில் வளைவுடன் மேம்படுத்துதல், பாம்பன் வடக்கு மீனவ கிராமத்தில் தூண்டில் வளைவு அமைக்கவும் வேண்டி கோரிக்கையை மனுவாக அளித்தோம்.

மக்கள் பிரதிநிதிகளின் கோரிக்கைகளை உடனடியாக ஆய்வு செய்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு அரசின் நிதியிலிருந்து 360 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து அறிவிப்பு வெளியிட்டதற்கு மீனவ மக்களின் சார்பாகவும், கழக மீனவர் அணி சார்பாகவும் நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்கள். மீனவ சமுதாய மக்களின் கோரிக்கையினை ஏற்று 18—8-2023 அன்று மண்டபத்தில் நடைபெற்ற மீனவர் நல மாநாட்டில் பங்கேற்றபோது அளிக்கப்பட்ட கோரிக்கைகளை ஏற்று, பல்வேறு அறிவிப்புகளை அந்த மாநாட்டிலேயே அறிவித்தார்கள் அந்த அறிவிப்புகளை நிறைவேற்றும் வகையில், மீனவ மக்களுக்கான கூட்டுறவு கடன் திட்டத்தின் கீழ் 77,402 நபர்களுக்கு 1,198.79 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது. 6,242 மீனவர்களுக்கு வீடுகளுக்கான பட்டா வழங்கப்பட்டுள்ளது. மீன்பிடி தடைக்காலத்திற்கான நிவாரணத்தொகை ரூ.8000/ மாக உயர்த்தப்பட்டு, 60 வயதிற்கு மேற்பட்ட மீனவர்கள் உட்பட 1.80 இலட்சம் மீனவ குடும்பங்களுக்கு 143 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

மீன்பிடி படகுகளுக்கான மானிய விலையிலான டீசல் விசைப்படகுகளுக்கு 18,000 லிட்டரிலிருந்து 19,000 லிட்டராகவும், நாட்டுப்படகுகளுக்கு 4,000 லிட்டரிலிருந்து 4,400 லிட்டராகவும் மற்றும் மண்ணெண்ணெய் 3,400 லிட்டரிலிருந்து 3,700 லிட்ட ராகவும் உயர்த்தப்பட்டு நடப்பாண்டில் வழங்கப்பட்டுள்ளது. மீன்பிடி படகுகளுக்கு 1,000 வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மீனவர் குழு விபத்துக் காப்புறுதி திட்டம் செயல்பாட்டில் இல்லாத காலகட்டத்தில் இறந்த 205 மீனவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் மற்றும் சுழல் நிதியமாக ரூ 3.53 கோடி வழங்கப்பட்டுள்ளது. மீனவர்களுக்கான வீட்டுவசதி திட்டத்தின் கீழ் அலகுத் தொகையானது ரூ. 1.70 இலட்சத்திலிருந்து ரூ. 2.40 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. பாரம்பரிய மீனவர்களின் நம்பிக்கை நாயகர் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றது முதல் மீனவர் சமுதாய மக்களின் எண்ணற்ற கோரிக்கைகளை நிறைவேற்றிவருகிறது ஆட்சியில் இருந்தாலும், ஆட்சி பொறுப்பில் இல்லாத காலங்களிலும் மீனவர்களின் பல்வேறு நியாயமான கோரிக்கைகளுக்காகவும், பாரம்பரிய உரிமைகளுக்காகவும் இந்தியா நாடாளுமன்றத்தில் ஓங்கி குரல் எழுப்பியும், சட்டப்போரட்டங்கள் நடத்தியும் மீனவ மக்களின் காவல் அரணாக திகழ்ந்து வருகிறது என்பதை மீனவமக்கள் நன்கு அறிவார்கள்,

ஆர்ப்பாட்டத்திற்கு தலைமையேற்ற கழக துணை பொதுச்செயலாளர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. கனிமொழி கருணாநிதி அவர்களிடம் ராமநாதபுரம் மாவட்ட மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் அளித்த கோரிக்கைகளையும், 18.02. 2025 அன்று முதலமைச்சர் அவர்களுடன் செயலகத்தில் நடைபெற்ற மீனவர்கள் நன்றி தெரிவிக்கும் நிகழ்வில் தமிழ்நாடு முதல மைச்சர் முக.ஸ்டாலின் அவர்களிடம் ராமநாதபுரம் மாவட்ட மீனவர் சங்கங்களின் பிரதிநிதி கள் சந்தித்து இந்தியாவின் எந்த மாநில முதல்வரும் இதுவரை செய்திராத வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2023 ஆம் வருடம் ராமேஸ்வரம் மாவட்டம் மண்டபம் பகுதியில் நடைபெற்ற மீனவர் நல மாநாட்டில் கலந்து கொண்டு 1000 கோடி ரூபாய் அளவில் மீனவர் நலன் சார்ந்த பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்தார்கள்

மேலும் ராமநாதபுரம் மாவட்ட மீனவ பிரதிநிதிகள் வைத்த மிக முக்கிய கோரிக்கைகளான தங்கச்சி மடம் மீன்பிடி இறங்குதளம் மீன்பிடி துறைமுகமாக தரம் உயர்த்தப்படும் எனவும் குந்துகால் மீன் இறங்கு தளம் தூண்டில் வளைவுடன் அமைக்கப்படும் எனவும் ஆகிய திட்ட செயல்பாடுகளுக்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அதன் அடிப்படையில் இது போன்ற உட்கடமைப்பு வசதிகளை ஏற்படுத்திட ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீடு செய்யாத நிலையிலும் தமிழ்நாடு அரசின் நிதியிலிருந்து ரூபாய் 360 கோடியை ஒதுக்கீடு செய்து பணிகளை மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கும் மீனவ மக்களின் சார்பாக நன்றி!

மீனவர் நலன் காக்கும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான கழக அரசு எல்லோருக்கும் எல்லாம் என்ற உயரிய கொள்கையுடன் இந்தியாவின் முன்னோடி மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கி வருவதோடு, கழகத்தலைவராக பொறுப்பேற்ற நாள் முதல் சந்தித்த அத்தனை தேர்தல்களிலும் வெற்றி வாகை சூடி வருகிறது. மீனவ மக்களுக்கு திராவிட முன்னேற்ற கழகம் ஆற்றிவரும் அருந்தொண்டிற்கு கைமாறாக வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் தி.மு.க தலைமையிலான கூட்டணி மகத்தான வெற்றியை பெற அயராது உழைப்போம். அதுவே நன்றி உணர்வுக்கும், விசுவாசத்திற்கும் அடையாளமாக திகழும் மீனவ மக்களாக்கிய நாம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு செலுத்தும் உண்மையான நன்றி பாராட்டாக இருக்கும்.

இவ்வாறு தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## நெல்லை மத்திய மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளிலும்

# இந்தித் திணிப்புக்கு எதிராக மக்களிடம் விழிப்புணர்வு செய்வீர்!

### மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் வேண்டுகோள்!

நெல்லை, பிப். 21 -

நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

நெல்லை மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மாநகர கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள்,வட்டக் கழக நிர்வாகிகள்,ஒன்றிய கழக,கிளை கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள் அனைவருக்கும் அன்பான வேண்டுகோள்.

ஒன்றிய அரசு மும்மொழிக் கொள்கையை ஏற்றால் தான் பள்ளிக்கல்வித் துறைக்கு வழங்க வேண்டிய தொகையை வழங்குவோம் என்று மிரட்டி, நம் மாநிலத்திற்கு தர வேண்டிய நிதியை முழுமையாக நிறுத்தி வைத்திருக்கிறது. இந்தித் திணிப்பை ஒரு போதும் ஏற்க மாட்டோம்’ என்று கழகத் தலைவர் அவர்கள் கடுமையாக எதிர்த்து வருகிறார்கள். இந்தி திணிப்பை ஒன்றிய அரசு மேற்கொள்ளும் போதெல்லாம் தமிழ்நாடு ஒன்றிணைந்து எதிர்த்து வந்திருக்கிறது.



அதன் தொடர்ச்சியாக,நமது தன்னிகரில்லா தலைவர், முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க இளைஞர்களின் எழுச்சி நாயகன் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி தற்போதைய இந்தித் திணிப்பு நடவடிக்கைகளை எடுத்துக் கூறி மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்து வகையிலும்,நமது தமிழகத்தின் வலுவான எதிர்ப்பை தெரிவிக்கும் வகையிலும் அடுத்த ஒரு வாரத்திற்கு,நமது மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் எளிய நிகழ்ச்சிகளை அடுத்தடுத்து நடத்த வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறது.

உதாரணமாக:

ஒரு வாரத்திற்கு தொடர்ச்சியாக இல்லங்களின் முன்பாக ‘இந்தித் திணிப்பை எதிர்ப்போம்’ என்ற வாசகத்துடன் கோலமிடச் சொல்லலாம்.

பேருந்து நிறுத்தங்கள் ஆட்டோ நிறுத்தங்களில் “இந்தி திணிப்பை நிறுத்து”என்ற பதாகைகளை நிறுவலாம்.

எளிய வாசகங்களுடன் துண்டறிக்கைகளை அச்சடித்து வீடு வீடாக வழங்கலாம். இவை தவிர,அந்தந்த இடங்களுக்கு ஏற்ப நிகழ்ச்சிகளைத் திட்டமிடலாம்.

பிப்ரவரி 28 ஆம் தேதி வரையிலும் இத்தகைய எளிமையான செயல்பாடுகள் மூலம் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற் கான நடவடிக்கைகளை மேற்கொண்டு, அதன் நிழற் படங்களையும் - வீடியோக்களையும், நெல்லை மத்திய மாவட்ட கழக அலுவலகத்திற்கும்,9042762298 என்ற மாநில தலைமை கழக எண்ணுக்கும் அனுப்பி வைக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.